

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மக்கள் விடுதலைக் கட்சியின் நிறுவனத் தலைவர் சு.க.முருகவேல்ராஜன் சந்தித்து, தனது மகன் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.



சிவகங்கை மாவட்டத்தில் 14,15 ஆகிய தேதிகளில் இரண்டு தினங்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்ட துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் காரைக்குடியில் நடைபயணம் மேற்கொண்டார். பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள டிக்கடையில் பொதுமக்களுடன் டீ அருந்தினார். உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகணி செந்தில் குமார் உள்ளார்.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# சேலம் மத்திய மாவட்டக் கழகம் சார்பில் நல உதவிகள் - போட்டிகள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா. இராஜேந்திரன் அறிக்கை !

சேலம், நவ.20-

துணை முதல்வர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி, நவம்பர் 27ஆம் தேதி சேலம் மத்திய மாவட்டம் முழுவதும் நல உதவிகள்- கோலப் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் கழக செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக தி.மு.க அலுவலகமான “கலைஞர் மாளிகை”யில் 18.11.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணி அளவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரைப் போல நகைச்சுவை உணர்வும், சிந்தனையாற்றலும் கொண்ட இளந்தலைவர் அவர்கள், கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் போல ஓய்வின்றி உழைத்திடும் உழைப்புக்குச் சொந்தக்காரார். ஒரு கோடிக்கும் மேற்பட்ட கழகத் தோழர்களையும், பல லட்சக்கணக்கான இளைஞர்களையும் அரவணைத்து, தனது தூய அன்பினால் கட்டிப்போடும் பண்பாளர், கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் சிந்தனையை, நிர்வாக ரீதியாக செயலாக்கிக் காட்டும் வல்லமையும் பேராற்றலும் படைத்தவர், கட்சி நிர்வாகத்திலும், ஆட்சி நிர்வாகத்திலும் தலைசிறந்த ஆளுமையோடு பணியாற்றும் மிகச்சிறந்த தலைமை பண்பை பெற்று வளர்ந்து வரும் இளம் தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர், இளம் தலைவர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மக்கள் பணியில் உழைப்பால் முன்களப் பணியாளராகவும், கழகப் பணியாற்றுவதில் முதன்மை தொண்டராகவும் விளங்கி வருகின்றார்கள்.

”திராவிட பயிற்சி பாசறை”, ”என் உயிரினும் மேலான“, ”முரசொலி பாசறை” “அறிவுத்திருவிழா” என இளைய தலைமுறையினரை கொள்கை பிடிப்போடும், இலட்சிய வீரர்களாகவும் உருவாக்கிடும், நம் அனைவரின் பெருமைக்குரிய ஒரு இளம் தலைவராக, கழகத்தின் எதிர்காலமாக விளங்கி வருகிறார்கள்.

எளியோர் வாழ்வில் எழுச்சி காண வேண்டும் என அயராது பாடுபட்டு வரும் இளம் தலைவரின் பிறந்தநாள் இளைய தலைமுறையினரும், கழகத்தினரும் கொண்டாடும் எழுச்சி நாளாகும். அவர்தம் பிறந்த நாளான நவம்பர் 27ஆம் நாள் நமது சேலம் மத்திய மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் நலத்திட்ட உதவிகள், மருத்துவ முகாம்கள், மரக்கன்றுகள் நடுதல், பொதுக்கூட்டங்கள் நடத்துதல், ஆண்களுக்கான விளையாட்டு போட்டிகளான மட்டைபந்து, கால்பந்து, கைப்பந்து, இறகுபந்து (Badminton), கூடைபந்து, கபடி, குத்துச்சண்டை, தடகளம், வரிபந்தாட்டம் (Tennis), மிதிவண்டி ஓட்டுதல், கராத்தே, பளுதூக்குதல், யோகா, உடற்கட்டமைப்பு (Body Building), வளைபந்தாட்டம் (Hockey), எறிபந்தாட்டம் (Handball), நெடுஞ்சாலை ஓட்டம் (Marathon), பானை உடைத்தல், வழுக்கு மரம் ஏறுதல், கோகோ, கயிறு இழுத்தல் போட்டிகளும், பெண்களுக்கு கோலப்போட்டி, கயிறாட்டம் (Skipping), கயிறு இழுத்தல் போட்டி, மிதிவண்டி போட்டி, கோகோ, இசைநாற்காலி, கோலாட்டம், ஏழுக்கல் போட்டி, சாக்குப்பை நொண்டி விளையாட்டு, ஓவியபோட்டி ஆகிய விளையாட்டுப் போட்டிகளை ஒவ்வொரு பாக அளவிலும் குறைந்தபட்சம் 4 போட்டிகளையாவது நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்குவதோடு, வெற்றி வாய்ப்பை இழந்தவர்களுக்கும் ஆறுதல் பரிசுகளை வழங்கிட வேண்டும், மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளையும் எழுச்சியோடு ஏற்பாடு செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்வதோடு ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மகளிர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, நெசவாளர் அணி, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, வழக்கறிஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சிறுபான்மையினர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பாசறை, வர்த்தக அணி, தொண்டர் அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அயலக அணி ஆகிய அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் என அனைத்து நிர்வாகிகளையும், கழகத் தோழர்களையும் இந்த நிகழ்ச்சிகளை இரண்டு மாதகாலத்திற்கு எழுச்சியோடு, உணர்வுபூர்வமாக சிறப்பாக கொண்டாட வேண்டும் என சேலம் மத்திய மாவட்ட தி.மு.க அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## நடப்பு சம்பா பருவத்தில்

# நெல் கொள்முதலுக்குத் தேவையான முன்னேற்பாடுகள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் கலந்தாய்வுக் கூட்டம்!

சென்னை, நவ.20-

நடப்பு சம்பா பருவத்தில் நெல் கொள்முதலுக்குத் தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் வேளாண்மை - உழவர் நலத்துறை, உணவுப் பொருள் வழங்கல் துறை அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.



தமிழ்நாட்டில் 2024-25 நெல் கொள்முதல் பருவத்தில் இதுவரை இல்லாத வகையில் 47.99 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் மேற்கொள்ளப்பட்டு வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டுள்ளது. நடப்பு 2025-26 கொள்முதல் பருவத்தில் டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் இதுவரை 14.18 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறையினரால் வழங்கப்பட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில், 2025-26 ஆண்டில் நெல் சாகுபடி பரப்பு கடந்த ஆண்டை விட கணிசமான உயர்வைப் பெற்றுள்ளதாலும், நெல் விளைச்சலும் அதிகமாக உள்ளதாலும் இந்தாண்டு நெல் மகசூல் வரலாற்றுச் சாதனையை எட்டக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தடையின்றி நெல் கொள்முதல் செயல்பாடுகளுக்கு தேவையான சாக்கு , சணல் , தார்ப்பாலின் பாய்கள், ஈரப்பதமானி, மின்னணு தராசு, தரச் சோதனைக் கருவிகள், நெல் தூற்றும் இயந்திரங்கள், சவுக்கு கட்டைகள், வெட்டுக்கற்கள் உள்ளிட்ட அனைத்து உபகரணங்களையும் போதுமான அளவில் இருப்பில் வைத்திருக்கவும் மாவட்ட அலுவலர்களுக்கு தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்குமாறு அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆண்டு அதிகமான அளவில் நெல்கொள்முதல் எதிர்பார்க்கப்படுவதால், 4.03 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரையிட்ட நவீன நெல் சேமிப்புத் தளங்கள் பயன்பாட்டில் இருந்தாலும், மாவட்ட வாரியாக கிடங்கு வசதிகளை மதிப்பாய்வு செய்து, புதிய தற்காலிகத் திறந்தவெளி கிடங்குகளை அமைக்கும் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டது. மேலும், அரசின் பயன்பாட்டிலில்லாத கட்டிடங்கள் மற்றும் பிற துறைகளின் கிடங்குகளை யும் தற்காலிகச் சேமிப்பிற்கு பயன்படுத்தும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்திடவும் அறிவுறுத்தப்பட்டது.

விவசாயிகளிடமிருந்து நெல்லினை எவ்வித காலதாமதம் இன்றி கொள்முதல் நிலையங்களில் உடனடியாக கொள்முதல் செய்திட கூடுதல் திட்டம் வகுத்திடவும், நெல் கொள்முதல் நிலையங்கள் வாரியாக விவசாயிகள் கூட்டம் நடத்திடவும் அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், எதிர்வரும் பருவ மழைக்காலத்தை முன்னிட்டு, கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரவை ஆலைகளுக்கும், சேமிப்பு கிடங்குகளுக்கும் தாமதமின்றி நகர்வு செய்திடவும், திறந்தவெளி சேமிப்பு நிலையங்களில் சேமிக்கப்பட்டுள்ள நெல்லினை மிகவும் பாதுகாப்பாக வைத்திடவும், இவற்றை கண்காணித்திட மண்டல அளவில் மேற்பார்வை அலுவலர்கள் நியமித்திடவும், மாவட்ட அளவில் கொள்முதல் செயல் பாடுகளை ஒருங்கிணைக்க, மாவட்ட ஆட்சியர்களுடன் இணைந்து ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்து செயல்படவும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு வேளாண் விளைப்பொருள் விற்பனை வாரிய ஆணையர் த.ஆபிரகாம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நிர்வாக இயக்குநர் முனைவர் ஆ. அண்ணாதுரை, வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் சு.சிவராசு, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன இயக்குநர் முனைவர். ஜெ.விஜயாராணி, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு துணைச் செயலாளர் பனோத் ம்ருகேந்தர் லால், கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) மருத்துவர். மு. வீரப்பன், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு காவல்துறைத் தலைவர் ரூபேஷ் குமார் மீனா மற்றும் வேளாண்மை, உணவுத்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி வடமாவளி மில் ரூ.4 கோடியில் கண்மாய் தூர்வாரும் பணியினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே. ஆர்.பெரியகருப்பன், துவக்கி வைத்தார். உடன் கண்காணிப்பு பொறியாளர் அண்ணாதுரை, முன்னாள் ஒன்றிய குழு தலைவர் எஸ்.சண்முகவடிவேல் மற்றும் பொதுப் பணித் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மத்திய மாவட்டக் கழக அலுவலகமான முரசொலி மாறன் வளாகத்தில், வாக்காளர் திருத்தப்பட்டியல் (S.I.R) குறித்து, தெற்கு சட்டமன்றத் தொகுதி, நல்லூர் பகுதி, பெரிச்சிபாளைம் பகுதி, தென்னம்பாளையம் பகுதி, வார்டு எண் : 46,47,48,49,55,56,51,52 ஆகிய வட்டத்திற்குட்பட்ட பாக முகவர்கள் (BLA 2) மற்றும் பூத் கமிட்டி ஒருங்கிணைப்பாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர், க.செல்வராஜ் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இதில் தெற்கு மாநகரச் செயலாளர் டி.கே.டி. மு.நாகராசன், தொகுதி பார்வையாளர் ப.ராம்குட்டி (எ) ராமமூர்த்தி உள்பட மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிப் பொறுப்பாளர்கள், பாக முகவர்கள், பூத் கமிட்டி ஒருங்கிணைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




தூத்துக்குடி வடக்கு மாவட்டம்,விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய கழக பொறுப்பு குழு உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள பரமசிவம், ஜெயலட்சுமி, மாரியப்பன், ஜவஹர், நல்லமுகமது உள்ளிட்டோர் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்க்கண்டேயன் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் இமானுவேல், சின்ன மாரிமுத்து, அன்புராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.